**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 86/2022**

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 09–ம் நாள் திங்கட்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 09.02.2026 | | |
| பெயர்: | கணேஷ் (PW–2 Chief ) | தகப்பனார் பெயர்: | கிருஷ்ணமூர்த்தி |
| கிராமம்: | அகர எலத்தூர் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | தூய்மை பணியாளர் | வயது : | 44/2026 |

**முதல் விசாரணை : 09.02.2026**

நான் இவ்வழக்கின் வாதி தரப்பு சாட்சியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். என்னுடைய சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

எனது சாட்சியத்தை ஏற்றுக்கொண்டு தக்க உத்தரவிடும்படி வேண்டுகிறேன்.

**2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

**(ஆரம்பித்த நேரம்–11.45)**

1. கிறிஸ்டோபர் பொன்னன் என்பவர் வாதியாவார். எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் தாவா சொத்தை அடமானம் வைத்து பணம் பெற்று தற்போது பணத்தை முழுவதுமாக கொடுத்துவிட்டார். அதற்காக பெந்தக

கடனை சார் பதிவாளர் அலுவலகத்தில் நீக்குவதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனக்கு சாட்சியமளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை ஏதும் வரவில்லை.

2. எந்த தேதியில் பணம் திருப்பி கொடுக்கப்பட்டது என்றால் சரியாக ஞாபகமில்லை, ஆனால் 2002ம் வருடம் இருக்கும்.வாதி பாண்டிச்சேரியை சேர்ந்தவர். வாதியின் முகவர் எங்கள் ஊரைச் சேர்ந்தவர். வாதியின் முகவர் எங்கள் ஊரைச் சேர்ந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 11.49)**